**செ. கு. எண்: 019** **நாள்: 01.02.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 1.2.2018

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்கு **4.2.2018 முதல் 4.5.2018 வரை, 90** நாட்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டத்தில் உள்ள **8,000** ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**